செய்தித் தாளாகப் பதிவு பெற்றது.

வெள்ளிக்கிழமைதோறும் வெளி வருவது

# இந்து சாதனம்

சைவபரிபாலனசபை வெளியீடு.

ஆரம்பம்: விரோதி௵ (1889) ஆவணி மீ 23௳. அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

பிரதி விலை: சதம் 10.

புத்-எசூ] யாழ்ப்பாணம்:- பிலவங்க௵ புரட்டாதி௴ கஉ௳ வெள்ளிக்கிழமை (29-9-1967) [இல-உ௫]

JAFFNA COLLEGE
UNDERGRADUATE LIBRARY
OCT 2 '67

# "பராபரையை நினைந் துய்வோமாக"

நல்லை. மதுரை திருஞானசம்பந்தர் ஆதீனகர்த்தா

## ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாதத் தம்பிரான் சுவாமிகள்

நவராத்திரி விரதம், லோகமாதாவாகிய தேவியைக் குறித்து, அம்பிகையின் மூவகைக் குணங்களாகிய, சத்வ, ரஜஸ், தமோ என்பவை பொருந்திய ஞான சக்தி. கிரியா சக்தி, இச்சா சக்தி என்கின்ற மூவகைத் தோற்றங்களையும் எடுத்தருளும் பராசக்திக்கு, ஒன்பது நாள், இரவுகளை மகா நோன்பு நாட்களாகக் கொண்டாடப் பெற்று வருகின்றது. இம் மூவகைச் சக்திகளை துர்க்கா, லக்ஷ்மி, சரஸ்வதி எனப் போற்றுவர்.

பராபரையாய் சக்தியைந்தாய்ப் பூதம்தானாய் பல உலகாய் புவன அண்டப் பரப்பாய் மேலும் சராசரமாய் அனைத்துலகும் படைத்தெல்லாம் தான் சகமென்னும் சிறு வீட்டில் சிரித்துவாழ புராதனமாய்க் காத்து, [illegible] வடிவாய் எழுந்தருளி கறபாந்தத்தில் நிராதரமாய் அனைத்தும் அழித்து எலலாம் தானாய் நிறைந்துநின்ற பராபரையை நினைந்துய்வோமே.

விரிவாயுள்ள சக்திகளை எல்லாம் தன்னிடத்தில் வயமாகச் செய்து கொண்டிருப்பவள் ஆகிய மஹாசக்தியைப் புனிதமான புரட்டாசி மாதம அமாவாசை கழிந்த மறுநாள் பிரதமை துவங்கி விஜயதசமிவரை பூஜித்தல் நமது வாழ்க்கைக்குச் சிறப்பை அளிக்கும் பிரதமையன்று நித்ய அநுஷ்டானங்களை முடித்து. சக்திக்குத் தக்கபடி தேவியை ஆராதிக்க வேண்டும்; அம்பிகையை மண்டபத்தில் 4 கரங்களுடன் அலங்கரிக்க வேண்டும். 4 கைகளிலும, சங்கு, சக்ர, கதா, பத்மம தரித்தபடி, சிங்கவாகனத்தில் அமைந்திருப்பவளாய அலங்கரிக்க வேண்டும். இன்றேல 18 கரங்களுடன் வலது கீழ்க்கை முதல் வரிசையாக:

1. ருத்ராக்ஷம், 2. தாமரை, 3. பாணம், 4. கத்தி, 5. குலிசம், 6. கதை. 7. சக்ரம, 8. சூலம், 9. கோடரி, 10. சங்கம், 11. மணி, 12. பாசம, 13. சக்திஆயுதம், 14, தண்டம், 15. சர்மம், (தோலினால் எதிரியைத் தடுப்பது) 16 வில்லு, 17. தீர்த்தபாத்திரம, 18. கமண்டலம்.

இவ்வண்ணம் 18 கைகளிலும் அலங்காரமாக அமைத்து, அன்றேல் கலசம் வைத்து, தேவியை நவாவர்ண யந்திரத்தில் ஸ்ரீ சக்ரத்தில் ஸ்தாபனம் செய்து அலங்கரித்த மண்டபத்தில் தேவியை ஆராதிக்க வேண்டும்.

பிரதமையும், ஹஸ்தநக்ஷத்திரமும் கூடிய சுபயோகம் அமைந்த தினத்தில் தேவியை ஸ்தாபிப்பது அதிவிசேஷம் திரிகோணமாகக் குண்ட மமைத்து சண்டி ஹோமம் செய்வது மிகவும் சிறந்தது.

ஸ்ரீ மஹாலக்ஷ்மியும், சரஸ்வதியும் இருபுற மமர்ந்து எப்பொழுதும் சாமரம் வீசிப் பூசிப்பதாக – ஸசாமர - ரமா-வாணி சவ்ய தக்ஷிண சேவிதா – என்று லலிதா சகஸ்ரநாமம் ஞாபகப்படுத்துகின்றது. அதனால்தான் துர்க்கா, லக்ஷ்மி, சரஸ்வதி என்ற மூன்று மாதாக்களையும் அபேதமாகப் பூஜிக்க வேண்டிய அவசியம். ஆகவே நவராத்திரியும் ஜெகன் மாதாவைப் பூஜித்து, வீரம், ஐஸ்வரியம், கலாஞானம் பெறுவோமாக.



### அடிமை கொள்வாய்

சொல்விற் பனமு மவதான
முங்கவி சொல்லவல்ல
நல்வித்தையுந் தந்தடிமைகொள்
வாய்நளி ஞசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமைநல்கும்
கலவிப் பெருஞ் செல்வப்
பேறேசகல கலாவல்லியே.

— குமரகுருபரசுவாமிகள்

### நாவலர் நல்வாக்கு

பிறருக்கு வரும் கல்வி செல்வங்களைக் காணும்பொழுது, பொறாமை இன்றி மகிழ்தலே நன மனசுக்கு அழகு.

—o—

### நாவலர் சிலை

யாழ்ப்பாணம் நூல் நிலையத்தில் ஸ்ரீ ல ஸ்ரீ. ஆறுமுகநாவலரின் சிலையை நிறுவ யாழ்-மாநகரசபை ஆணையாளர்கள் முடிவு செய்துள்ளனர்.

பொது நூல் நிலையத்தின் மூன்றுவது கோபுர வேலைகள் முடிந்தவுடன் "கலையகம்" ஒன்று அமைக்கப் பெறும் இக் கலைக் கோயிலிலேயே நாவலர் சிலையும் இடம்பெறும்.

நா நிலம் போற்றும்

## நவராத்திரி நோன்பு

[ சிவஸ்ரீ க. வை. ஆத்மநாதசர்மா ]

இன்பமும் துன்பமுங் கலந்து அனுபவிக்கப்படுவதே இவ்வுலக வாழ்வு, எக்காலத்தும் இன் பமே கொண்ட வாழ்வு, ஒருபோதுந் துன்பமே இல்லாத வாழ்வு, அதுவே பேரின்ப வாழ்வு. இக் கருத்தை உள்ளடக்கியே, "இன்பமே எந்நாளுந் துன்பமில்லை" என்றார் வாகீச வள்ளலார்.

நாம் வாழும் இப் பூமியைக் கர்மபூமியென்பர். ஆன்மாக்கள் வினைகளைச் செய்வதற்கு உரிய இடம் இப் பூமி. — [illegible] பெற்றது. வினைகளைச் செய்யும் அளவில் மாத்திரமன்றி அவற்றின் பயனை முழுவதாகவேனும் பகுதியாகவேனும ஆன்மாக்கள் இங்கு அனுபவிக்கலாம் நல்வினை மேம்படுமாயின் அதன் பயன் சுவர்கக முதலிய போக பூமிகளிலும், தீவினை மேமபடுமாயின் அதன் பயன் நரகம் முதலிய யாதனா பூமிகளிலும சென்று அனுபவித்தே தொலைய வேண்டும்.

நல்வினை தீவினை ஆகிய இரண்டும் அனுபவித்து முடிந்து, — அதாவது -பழவினைக் கட்டாகிய சஞ்சித வினைகள் சிவ தீட்சை பெறும்போது குருவினது அருட் பார்வையினால் அழியவும்; மேல்வரும் பிறவிக்குரிய ஆகாமிய வினைகள் திருவருள வசத்தால் நீங்கவும; இப் பிறவியில் அனுபவிக்குமபடியாக விருக்கும பிராரத்த வினைகள இச் சரீரம நீங்கும்போது சிவ தீட்சை வசத்தால் தாக்கமின்றி ஒழியவும், வினை எஞ்சியிராத சமநிலையை அடைவதே ஆன்மாவின் பரிபக்குவ நிலை என்பது: எனவேதான், உலகில் வாழும் மக்களாகிய நாம் எம் வினை வசத்கால் வருகின்ற நன்மை தீமைகளை மனங் கோணமல் ஏற்று அனுபவிக்க வேண்டும். அதே வேளையில் பயன் கருதாத சிவ நல்வினைகளைச் சிவார்ப்பணமாகத் திருவருளை முன்னிட்டு எல்லாம் அவன் செயலாகச் செய்து வருதலும் வேண்டும்.

சிவநல்வினைகளுள் மிக்க சிறப்பு வாய்ந்தது நவராத்திரி நோன்பு. அது, "நாநிலம் போற்றும் நவராத்திரி நோன்பு" என்ற தலைப்பின்கீழ் இங்கு ஆராயப்படுகிறது. நா நிலம் - நால்வகைநிலம். அது ஆகு பெயராய் உலக மக்களைக் குறிக்கும். நவ - ஒன்பது, இராத்திரி -இரவுகள், நோன்பு - விரதம். நவராத்திரி நோன்பு எனப்படுவது சக்தி வழிபாடு எனப் பலராலும போற்றப்பட்டு வருகிறதே. ஆகவே அதனைச் சிவ நல்வினை எனல் எவ்வாறு பொருந்தும் ? என்ற வினா இங்கு எழலாம்.

சிவம் என்ற சொல்லின் உண்பொருளை அறியாதவரே இவ்வாறு வினா எழுப்பி மயங்குவர். "சி"கரம பதி எழுத்து, "வ"கரம் பரையெழுத்து எனவே "சிவ" எனச் சொல்லும் போது சக்தியோடு கூடிய

தொடர்ச்சி 6-ம் பக்கம்

நல்லை, திருஞான சம்பந்தர் ஆதீனத்தில்

### நவராத்திரி விழா வழிபாடு

தினம் காலை 10 மணி:

ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரிக்கு அபிஷேக ஆராதனை.

மாலை: 5-00 மணி - கொலு பூஜை

,, 5-30 மணி லலிதா சகஸ்ர நாம அர்ச்சனை

,, 6 மணி முதல் 7 மணிவரை - இசை அரங்கு

இரவு 7 சோட சோபசார பூஜை — ஆதீனச் செயலாளர்.

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

THE HINDU ORGAN

# இந்துசாதனம்

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவ ரானினம் வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையக முந்துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

பிலவங்க௵ புரட்டாதி மீ ௧௩ ௳ வெள்ளிக்கிழமை [1967]

## நவராத்திரியும் நமது கடமையும்

கன்னி மாதத்துப் பூர்வ பக்கப் பிரதமைத் திதி முதலாக வுள்ள ஒன்பது இரவுகள் நவராத்திரி என்றழைக்கப்பெறும். பத்தாவது நாள் விஜய தசமியாகும். சிவபெருமானுடைய கருணையே சக்தியெனப்படும்.

தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தருஞ்சத்தி
பின்னமிலா னெங்கள் பிரான்".

சிவபெருமான் ஆன்மாக்கள் தமது ஒப்பற்ற நிலையைப் பொருந்தும்படி அருளுகின்ற சத்தியினும் வேறாகாதவர். சிவபெருமான் மும்மூர்த்திகளாகப் படைத்தல், காத்தல் அழித்தலைப் புரியும் காலத்தில பிரமா விஷ்ணு உருத்திரன் என்று அழைக்கப்படுவர் பராசத்தியும், துர்க்காதேவியாக வீரத்தையும், இலக்குமியாகச் செல்வத்தையும், சரசுவதியாகக் கல்வியையும் அநுக்கிரகஞ் செய்வார். நவராத்திரியின் முதல் மூன்று இராக்களிலும் துர்க்கையையும் நடு மூன்று நாட்களிலும் இலக்குமியையும் கடைசி மூன்று நாட்களிலும் சரசுவதியையும் மக்கள் வழிபட்டு இஷ்ட சித்திகளைப் பெறுவர். இவ் வருடம் நவராத்திரிபூசை 4-10-67 ல் ஆரம்பமாகின்றது. விஜயதசமி 13-10-67ல் நிகழும்.

நவராத்திரி காலத்தில் மக்கள் தேவியைப் பய பக்தியுடன் வழிபடுதல் வேண்டும். இக் காலத்தில் விரதம் அநுட்டித்தலும் சிறந்த தவமாகும். இறை வழிபாடு குன்றி வருதலே நாட்டில் மழையின்மைக்கும், வறுமைக்கும், கொடிய நோய்களுக்கும், பிற துன்பங்களுக்கும் ஏதுவாகும். ஆலயங்களில் நடைபெறுகிற பூசைகளும் திருவிழாக்களும் ஆகமவிரோத மற்றமுறையில் பக்திசிரத்தையுடன் நிகழ்தல்வேண்டும். பிறருடைய புகழுரையை விரும்பிப் படாடோபமாக ஆலயக் கிரியைகளைப் புரிதலினால் ஒரு பலனுங் கிடையாது. கசிந்து மனமுருகி இறைவனை வழிபடுகின்றவர்களுடைய உள்ளத்தில அவர் புகுந்திருப்பர். வஞ்சகமாக பிறருக்குத் தங்களைக் கடவுள் பத்தரென்பதைக் காட்டும் நோக்கத்துடன் வழிபடுபவர்களுக்கு அவர் தூரத்திலே சென்றிடுவார்.

நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே
புக்கு நிற்பன் பொன்னார் சடைப் புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவும் நீரும்கண்டு
நக்கு நிற்பவர் அவர்தமை நாணியே.

கடவுளை மெய்யன்போடு வழிபடாமையாற்றான் அறங் குன்றிவிட்டது. அறம் வளர வானம வழங்கும். வானம் வழங்கச் செல்வம் பெருகும் வறுமை பசி முதலிய துன்பங்கள் நீங்கும்.

மாணிக்கவாசகருடைய துன்பத்தை நீக்கும்பொருட்டு சிவபெருமான் வைகையைப் பெருகச்செய்தார். நாடெங்கும் புணரி போல வெள்ளம் பெருகிற்று. பாண்டியன் மக்கள்படும் துன்பத்தை நோக்கி வைகையைத் தணியும்படி பொன் முத்து முதலிய திரவியங்களை இட்டுத் தொழுதான். வைகையினது வேகம் தணியவில்லை. பின்பு பாண்டியன் தமது மந்திரிமார்களை வினவுகின்றான்:—

"நமது நாட்டில் ஆதி முதல்வனும் மங்கையைப் பாகம் கொண்டவராகிய சிவபெருமானுடைய ஆலயங்களில் நடைபெறும் பூசைகளில் ஏதும் குறை நேர்ந்ததோ? அல்லது சிவனடியார்களுடைய மனம் வருந்தும்படியான குறைகள் நேர்ந்ததுண்டோ?"

ஆதியாங் கடவு ளெந்தை யாலவா யமலன் மங்கை
பாதியான் சிறந்த பூசை பண்டையிற் குறைந்ததுண்டோ?
நீதியாந் தவத்தின் மிக்கார் நெஞ்சகம் புழுங்க மண்மேற்
றீதியாஞ் செய்ததுண்டோ செப்புமி னமைச்ச ரென்றான்.

பின்பு மந்திரியாருடைய ஆலோசனையின்படி மாணிக்கவாசகரைச் சிறையினின்றும் நீக்க வையை நதியின் வேகந் தணிந்தது. பாண்டியனைப்போல நாமும் நம நாட்டில் காணப்படும் இன்னல்களுக்குரிய காரணத்தை அறிந்து அவற்றை நீக்குதல நம கடமையாகும். உளளும் புறமும் தூயராக — சைவ ஆசார சீலத்தோடு மனங் கசிந்து, தேவியை வழிபட்டு நமது இன்னல்களைப் போக்குவோமாக.

## அம்பிகையே அருள்வாய்!

" அளவையூர் — சஞ்சீவி "

இராகம் : கல்யாணி :: தாளம் : ஆதி

பல்லவி

அம்பிகையே வருவாய் — அருள்வாய்
அம்பல நாடக மங்கள நாயகி (அம)

அநுபல்லவி

அம்புய பூரணி ஆகம காரணி
அற்புதக்கலை வாணி நித்திய கல்யாணி (அம்)

சரணம்

பதமலர்ச் சிலம்பு சலசல என்றிட
பங்கய வதனம திங்களை வென்றிட
கதிரொளி மேனி கருணை சொரிந்திட
கயல்விழி யோடிள முறுவல் தெரிந்திட. (அம்)

x x x

## "மூவுலகுங் காக்கும் பரை"

— பண்டிதர் செ. சிவப்பிரகாசம் —

மூவர்களுள் முதல்வனென மொழியுமரன் பாங்கில்
மூவுலகுங் காக்தும்பரை ஆகியுறை தாயே!
பூமலரும் பொன்மலரும் பொலிவுடனே சொரிந்து
பூதகணம் புடைநெருங்கிப் போற்றிசெய நாளும்
தேவர்களும் முனிவர்களும் சித்தர்களுங் கூடிச்
செய்ய திரு அடிபரவச் சேர்ந்திடுவர் மற்றும்
ஏவர்களும் எண்டிசையும எண்ணிலராய்க் கூடி
எம்மரிய இறைவி என ஏத்திடுவர் தாயே!

## மஹாளய அமாவாசை

சைவப்புலவர். வ. சுப்பிரமணியம்.

இச் சொற்றொடர் ( மகா- [illegible] கல்) பிதிர்கள் சென்று ஒடுங்கியிருக்கின்ற பக்ஷத்திற்குரிய அமாவாசை என்பதைக் குறிக்கும். மஹாளய பட்ச காலம் புரட்டாதி மாத அமாவாசைத் தினமும் அதற்கு முன்னுள்ள பதினாலு நாட்களுமாம். இப் பட்சத்தொடக்கத்தில் ஒரு மாச காலத்திற்கு அதாவது சூரியன் விருச்சிக ராசியிற் பிரவேசிக்கும் வரையில் ஒருவனுடைய முன்னோர்கள் (பிதிர்கள்) அவனது வீட்டில் தங்கி நிற்பார்கள்.

சைவ ( இந்து ) சமயக் கிரியைகளனைத்தும் தீட்சா குருவினாலும் அவருப தேசப்படி கர்த்தாவாலும செய்யப்படுவனவாதலால் மஹாளயசிரார்த்தத்தில் செய்யப்படும் கிரியைகள மூலமாகக் கொடுக்கப்படும் பலி வணக்கம முதலியவற்றை அந்தப் பிதிர்கள் மகிழ்ந்து ஏற்றுக் கொளவார்கள் என்பது சைவ சமயக் கொள்கை. இதனாற்றான் ஒவ்வொரு மாச அமாவாசைத் தினத்திலும் தங்கள் சந்ததியான் கொடுக்கும் பலி முதலியவற்றால் அவனது பிதிர்கள் திருப்தியடைவார்கள் என்னும் நம்பிக்கையுண்டு. ஆயினும் மற்றைய மாசங்களில் வருகிற அமாவாசைத் தினத்திலும பார்க்க புரட்டாதி மாச அமாவாசை அதிக புனிதமும் மேன்மையுமுடையதாயிருத்தலின் அத் தினத்திற்கு முந்திய பதினான்கு தினங்களும் பிந்தியபதினான்கு தினங்களும் பரிசுத்த தினங்களாகவே கருதப்படுகின்றன.

ஆகவே மற்றைய மாச அமாவாசைத் தினங்களில்

( தொடர்ச்சி 6-ம் பக்கம் )

## நாவலர் நினைவுக் கட்டுரைப் போட்டி

"கொழும்பு விவேகானந்த சபை இவ்வருடம் ஆறுமுகநாவலர் நினைவுக் கட்டுரைப் போட்டியை, 9-11-67 வியாழக்கிழமை சைவசமய பாடப் பரீட்சை நடக்கும் ஸ்தானங்களில எலலாம்நாடத்தும். பேச்சுப்போட்டியின் பூர்வாங்கத் தேர்வு மாவட்டங்கள்தோறும் நவம்பர் மாத முற்பகுதியில் நடாத்தப்படும் இறுதித் தேர்வு, நாவலர் குருபூசைத் தினத்தை அடுத்து கொழும்பில நடைபெறும். இப் போட்டியில் பங்குபெறும் மாணவர்கள் எவ்வித பிரவேசக்கட்டணமும் செலுத்த வேண்டியதில்லையெனவும், வெற்றியடைவோருக்குத் தங்கப் பதக்கங்கள் முதலிய பல பரிசில்கள் வழங்கப்படுமெனவும் விண்ணப்பங்கள் 10 10-67 வரை ஏற்றுக்கோள்ளப்படும் எனவும், விவேகானந்த சபை பரீட்சைக் காரியதரிசி தெரிவிக்கின்றார்.

—

உ

## அருணந்தி சிவாசாரியர் குருபூசை

நாள் : பிலவங்க௵ புரட்டாதி மீ ௧௬ ௳ [ 2—10—67 ]
திங்கட்கிழமை
இடம்: சைவபரிபாலன சபை நாவலர் ஆச்சிரமமண்டபம்
நிகழ்ச்சிகள்:
இரவு 6½—7 கடவுளாராதனை.
தமிழ்மறையோதல்.
சபைதேவாரவகுப்புப் பிள்ளைகள்
7—8 விரிவுரை
சித்தாந்த பண்டிதர்
திரு. வே. சோமசுந்தரம்அவர்கள்
சைவாபிமானிகள் யாவரும் சமுகமளிப்பார்களாக.

மு. மயில்வாகனம்,
சமயப்பிரசார அமைச்சர்,
சைவ பரிபாலனசபை,
யாழ்ப்பாணம், 27-9-67,

## நாமமதில் தமிழரென வாழ்ந்திடுதல் நன்றே?



சித்தர்: 'நல்லை நாவலர் சிலையை யாழ். நூல்நிலையத்தில்நிறுவ நம் மாநகரசபை ஆணையாளர்கள் முடிவெடுத்திருக்கினமாமே...!

பத்தர் : அப்படியா? செய்தியைக் கேட்க உள்ளம்குளிருதப்பா! எல்லாம் அந்தப் பராசத்தியின் கருணைதான்; மெச்சத்தக்க இந்த வேலையை எப்பவோ செய்திருக்க வேணும்! வரிசை அறிந்து நம் தெய்வபுருஷர்களை ஏத்திப்போற்றுதவரையில் நம் மினத்துக்கோ இந் நாட்டுக்கோ மீட்சி ஏது?

சித்தர் : விடிவுகாலம் இருக்குது! ஆகுப்நான் அண்மித்துவிட்டதனால் — ஆணையாளர் உள்ளத்தில் புகுந்து அன்னைதான் இதை அறிவித்திருக்கிறுள; ஆணையாளர் அரியகருததை நிறைவுசெய்ய உகிலமே திரண்டெழவேண்டும்!

பத்தர் : 'நம்நாட்டுக்கு நல்லன எல்லாம் செய்த வல்லவன்- நாவலன்; தரணி மெச்சும் தன்னேரில்லாத் தலைவன் நாவலன்; இத்திருமகனுக்கு தேசியவீரர்கள் பட்டியலில் இடமளித்திருக்கின்றார்களா நம் ஆட்சியாளர்கள்?

சித்தர் : 'நாமமதில் தமிழரென — சைவரென வாழ்ந்திடுதல் நன்றோசொல்வீர் — ஆணையரே! அருமைமிகு வையத்தீரே! நாமமதில் தமிழரென நலிந்திடாமல் நம் நாவலர்க்குச் சிலையமைக்க விரைந்துவாரீர்? என அனைவரும் ஆணையாளர் கூறும்ஆக்கவேலைக்கு உதவ உறுதி பூணவேண்டாமா?

பத்தர் : இத்தகையோரை எண்ணித்தான் வள்ளுவரும் தம் குறட் பாவில்,
"சொல்லுக சொல்லைப்
பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து'
என்று பாடியிருப்பாரோ...?

" நாயன்மார் - நாதன் "

## தருமபுரம் ஆதீனத்தில்

# ஆவணி மூலத் திருநாள்

———o———

## "சைவம் பெருக்கும் சீலர்" என்னும் கௌரவப் பட்டம்

["இந்துசாதனம்" அபிமான கிருபர்
திரு. மா. பாலசுப்பிரமணியம் அவர்கள் சிதம்பரம், தென்னிந்தியா]

திருக்கயிலாய பரம்பரை தருமபுர ஆதீன மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கைலை சுப்பிரமணியதேசிக ஞான சம்பந்த பரமாசாரியசுவாமிகள் ஆவணி மூலத் திருநாளை மடாலயத்தில் சிறப்புடன் நடத்தினர்கள். காலை பூஜா மூர்த்தியான ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமானுக்கு விசேஷ அபிஷேக பூஜாலங்காரங்களை நடத்தி எல்லோருக்கும் அருள் பிரசாதங்கள் வழங்கப்பட்டன.

### விழாமலர் வெளியீடு

குருமணியவர்கள் விழாவின் நினைவாக "ஆளுடைய பிள்ளையார் மும்மணிக்கோவை" என்ற நூலை அச்சிட்டு வெளியிட்டு எல்லோருக்கும் அன்பளிப்புச் செய்தார்.

### பட்டமளிப்பு விழா

மாலையில் திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தில் பட்டமளிப்பு விழா நடைபெற்றது. குருமணிகள் எழுந்தருளி சென்னை திரு. எஸ். சச்சிதானந்தம் பிள்ளை அவர்களுக்கு "சைவம் பெருக்கும் சீலர்" என்ற சிறப்புப் பட்டத்தைப் பொற் பதக்கத்தில் பொறித்து வழங்கி அன்னாரின் சமயத் தொண்டைப் பெரிதும் பாராட்டி விலை உயர்ந்த பொன்னாடை போர்த்தி மாலை அணிந்து ஆசியுரை வழங்கினர்கள்,

### நூல் வெளியீடு

மகாசந்நிதான மவர்கள் புரட்டாசி 1ம் தேதி மன்று சிதம்பரத்தில் நிகழ்ந்த தமிழ்நாடு தெய்வீகப் பேரவைக்கு 2-வது முறையும் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டமைக்குக் கொண்டாடப்பட்ட பாராட்டு விழாவிற்கு எழுந்தருளிய போது ஸ்ரீ தில்லை நடராஜ மூர்த்தியைத் தரிசித்துக் கொண்டு விழாவின் நினைவாக "தில்லைவனம்" என்ற நூல் அச்சிட்டு வெளியிட்டு எலோருக்கும் அன்பளிப்புச் செய்தார்கள்,

———

## அணிந்துரை அரங்கம்

### பராசக்தி மாலை.

ஆக்கியோன் பண்டிதர்,
செ. சிவப்பிரகாசம்,

சிவபெருமானுடைய கருணையே பராசத்தி. பரசத்தியும் சிவனும் குணமும் குணியும் போலப் பிரிக்கப்படாத தன்மையை யுடையவர்கள்.

பராசக்தியை வழிபடுகின்றவர்; கல்வி, செல்வம், நோயின்மை, ஞானம, முதலிய பேறுகளை அடைவர். பண்டிதர் அவர்கள் பல அன்பர்களின் வேண்டுகோளின்படி இந் நூலை இரண்டாம் பதிப்பாக வெளியிட்டுள்ளார். அன்னை பராசக்தியின் திருவுருவப் படம் நூல் முகப்பில் காணப்படுகின்றது. சரஸ்வதி தோத்திரமும் சேர்க்கப்பட்டிருக்கின்றது. பண்டிதர் அவர்கள் சிறந்த சொற்களை அமைத்து எவரும்விளங்கக்கூடியமுறையில் முன்னும் பல செய்யுள் நூல்களை ஆக்கியுள்ளனர் படிப்பவர்கள் உள்ளத்தில் பக்தியை வளர்க்கக்கூடிய செய்யுட்கள் அடங்கியுள்ளன.

நவராத்திரி காலத்தில் அன்பர்கள் ஓதிப் பயனடையக் கூடியமுறையில் நூல் அமைந்திருக்கிறது.

x x x

### "விநாயகன்"

கொழும்பு கணபதிவித்தியாலயப் பெற்ருர், ஆசிரியர் சங்க வெளியீடு

கொழும்பு கணபதி வித்தியாலய பெற்ருர் ஆசிரியர் சங்கத்தினது பதின்மூன்ருவது ஆண்டு விழா மலராக "விநாயகன்" என்ற பெயருடன் இம்மலர் வெளிவந்துள்ளது. ஷ வித்தியாசாலை வரலாறு, தலைமையாசிரியருடைய அறிக்கை, சமயக் கட்டுரைகள், அடங்கியுள்ளன. யாழ்ப்பாணம் பா. உ. திரு ஜி. ஜி. பொன்னம்பலம், இளைப்பாறிய நீதியரசர் பொன். ஸ்ரீஸ்கந்தராசா கௌரவ உள்ளூராட்சி தகவல் ஒலிபரப்புஉதவியமைச்சர் கனம்; ஆர் பிரேமதாச முதலியவர்களுடைய ஆசிச் செய்திகளும் பிரசுரஞ் செய்யப்பட்டிருக்கின்றன. மலரின் அட்டையில் அழகிய விநாயகர் திருவுருவமும் மலரின் பெயருக்குப் பொருத்தமாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றது. ——

## இந்திரா காந்தியின் திரைப் படம்

பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் ஈழநாட்டு விஜயம் சம்பந்தமாய சினிமாப் படம் அக்டோபர் மாத முதல் வாரத்தில் இலங்கை அரசாங்க தகவல்பகுதியின் சினிமாப் பட பிரிவினரால் சினிமாத் தியேட்டர்களில் திரையிடப்படும். ——

யாழ்ப்பாணம்

## — ஐக்கிய இலாப நிதி —

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை J. P.
சிறுப்பர்.

Std. 14.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சபாபதிப்பிள்ளை நமசிவாயம் (Temple Road) கொக்குவில்
இல. M B. 6246 எதிராக —வழக்காளி
செல்லப்பா இராசலிங்கம் "கலியாணி" பண்டாரக்குளம் New Road நல்லூர் யாழ்ப்பாணம் எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B. 6246-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி. பின்னுல் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1967-ம் ஆு மார்கழி மீ 3-ந் உ ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் வின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:—முதல் வட்டி ரூபாய் 7900/-ம் 6-12-63 தொடக்கம் 8-10-64 வரைக்கும் ரூபாய் 5000/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 495 சதம் 65 தீர்வைத் தொகையில் ரூபா 1250/-கோட்டுச்செலவில் ரூபா 1501 கொடுபட்டது இவை கழிக்கப்பட வேண்டும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர் கோவில்பற்று நல்லூர்சிறை "பண்டாரக்குளமும், மறுதண்டுகளும" விலை லாச்சம் 10 குளி 8, 11/16 இந்த நிலப்பரப்பு 10, குளி 8 11/16-ல் பிறிவிடுதல் செய்யப்பட்ட காணி பரப்பு நிலை லாச்சம் 4 குளி 8, 11/16-ம் வடகிழக்கு எல்லைக் காணியிலிருக்கும் கிணற்றில் பங்கும் வழிவாய்க்கால் பாவிப் புரிமையும் மேலும் இக் காணிக்கு மேற்கு எல்லைக் காணியிலிருக்கும் வடக்கு எல்லைப் பக்கமாகப் போகும் 10 அடி அகலமான பாதையால் போக்குவரவு செய்யும் உரிமையும் இக்காணிக்கு எல்லை கிழக்கு ஆறுமுகம் செல்லப்பாவுக்கும் மறு பேருக்குமுரிய காணி வடக்கு கந்தையா பெண் இராசமமாவின் ஆதனம் மேற்கு அப்புத்துரை அருந்தவநாதன் பெண்கனகம்மாவின் ஆதனம் தெற்கு நல்லூர்கந்தசுவாமி கோவில் ஆதனம் பதிவு இலக்கம் D. 265/60

கமலபதி, ஆஸ்பத்திரி வீதி,,21—9—67 மண்டைதீவு

மு. நவரத்தினராசா. கொமிசனரும் விலைமதிப்பாளரும்
எம். 250, 6—10—)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

கொட்டடி, யாழ்ப்பாணம், முருகேசு சின்னக்குட்டி பெண் அன்னம்மா —வழக்காளி

இல. M B 4906

எதிராக

நாவாந்துறை வண்ணார்பண்ணை தென்மேற்கு 1. அருளப்பு நிக்கிளஸ்சும 2. பெண் மரியம்மா, முதலாம் எதிரி தனக்காகவும் தனது காலஞ்சென்ற பெண் 2-ம் எதிராளியின் தத்துவ பிரதிநிதியாகவும், —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் MB. 4906-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1967-ம் ஆு (21-10-67) ஐப்பசி மீ 21-ந் உ சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் வின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:—முதல் வட்டி ரூபாய் 2,554 ம் 28-6-62 தொடக்கம் 4-3-66 வரைக்கும் ரூபாய் 1,600-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 453/16 இதில் ரூபா 1000 வட்டி முதல் கணக்காலும் ரூபா 120 கோட்டுச்செலவுக் கணக்காலும் கொடுபட்டிருக்கிறது.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோயிற்பற்று வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை "தம்பலையடி" பரவில இலா 1-9. 6 குளி இதில் பிரிவிடப்பட்ட பரவில இலா 0-6. 9 குளி வீட்டில் ½ பங்கும் மற்றும் அதைச் சேர்ந்தவைகளும். இதற்கு எல்லை கிழக்கும் வடக்கும் சுவாமிப்பிள்ளை சில்வெஸ்றர் மரியதாசும் பெண் அன்னுசிப்பிள்ளையின் ஆதனம் மேற்கு றோட்டு தெற்கு ஒழுங்கை.

நா. ஸ்ரீ இரங்கநாதன்
கொமிசனரும் விலைமதிப்பாளரும்
23, பெருமாள்கோவில் தெற்கு ஒழுங்கை, யாழ்ப்பாணம்
31-8-67, எம், 253. 29-9—)

## திருவாதவூரடிகள் வரலாறு

### (ஹாலாஸ்ய மான்மியத்தின் வண்ணம்)

— பிரம்மஸ்ரீ K. சுப்பிரமணிய ஐயர் —

(முற்றொடர்ச்சி — 7)

81. நீயே எனக்கு விபூதியளித்திருக்கிருய். நீயே எனக்குப் புகலிடம். இவ்விதம் சொன்னவுடன் வானத்திலிருந்து ஓர் அசரீரி வாக்கானது அவனது துன்பத்தைத் துடைக்க உண்டாயிற்று.

82. "பக்தர்களுள் சிறந்தவனே உபசாரத்துடன் கடிதத்தை எழுதி மன்னனுக்கு அனுப்பிவை; பயப்படாதே; உனக்கு நானிருக்கிறேன்".

83. "என்னைத் தியானிப்பதில் நீ நிலைபுள்ளவனுயிரு. எனது பக்தர்களிடத்திலும, எனது மங்கள கருமங்களிலும் உனது செல்வம் அளிக்கப்பட்டிருக்கிறது. அதில் நான் மிகவும் திருப்தி யடைகிறேன்".

84. இந்தவிதமாக வாதபுரேசன் அந்த அசரீரி வார்த்தையை மகிழ்ச்சியுடன் கேட்டுவிட்டு கடிதத்தை எழுதி தூதனின்மூலம் மன்னனுக்கு அனுப்பிவைத்தான்.

85. அரசே! ஐந்தாறுநாட்களுக்குள்ளாகக் குதிரைகளைக் கொண்டுவருவேன். சிறந்த குதிரை லாயங்கள் அமைக்கப்படட்டும். நல்ல குளங்களும் வெட்டப் படட்டும் மதுராபுரியின் நடுவிலுள்ள வீதிகளெல்லாம் அலங்கரிக்கப்படட்டும்.

86, அரசே! கோள்சொல்பவர்களுடைய வார்த்தையை நீ கேட்காதே. எஜமானனே! எனது விரோதிகள் அங்கிருக்கின்ருர்கள். அவர்கள் உன்னுல் அறிந்துகொள்ளப்படவேண்டியவர்கள்.

87, ஓ! பிரபுவே! என்னிடம் நம்பிக்கைவைத்துப் பட்டணத்தில் சுகமாக இருப்பாயாக.

88. இந்தவிதமாகக் கடிதத்தை அனுப்பிவிட்டு, சிவசிந்தனையிலும் சிவஞானத்திலும பக்தியிலும ஈடுபட்டிருந்தும் அந்த மந்திரி சஞ்சலத்தை யடைந்தார்.

89. கவலையுடன் வாதபுரேசர் படுத்து உறங்கும் பொழுது கருணையினுல் உந்தப்பட்ட சிவபெருமான் சொப்பனத்தில் அவருக்குக் கூறினர். (தொடரும்)

### நாவலர் நல்வாக்கு

நீ பிறர்க்குச் செய்த உபகாரங்களை நீயே எடுத்துப் புகழ்தல் தக்கது அன்று.

## இந்துசாதனம்

திருத்திய வருடசந்தாவிகிதம்

| | |
|---|---|
| உள்நாடு | |
| ஆங்கிலம் | 9-00 |
| தமிழ் | 9-00 |
| ஆங்கிலம் - தமிழ் | 12-00 |
| வெளிநாடு | |
| ஆங்கிலம் | 10-50 |
| தமிழ் | 10-50 |
| ஆங்கிலம் - தமிழ் | 15-50 |

## காணிக் குத்தகை

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை பரிபாலித்து வரும் புண்ணியநாச்சி மடத் தருமத்தைச் சேர்ந்த வண்-மேற்கு "கள்ளப்பிரான் வயல்" தனிப்பட்ட ஒருவருக்கோ அல்லது பலருக்கோ குத்தகைக்குவழங்கப்படும. தேவையானவர்கள் காரியதரிசி, சைவபரிபாலனசபை, யாழ்ப்பாணம், என்ற விலாசத்துக்கு 20—10—67-க்கு முன் விண்ணப்பிக்கவும்.

காரியதரிசி,
சைவபரிபாலனசபை,
யாழ்ப்பாணம், 20—9—67

## கோட்டு விற்பனவு விளம்பரம்

உடுவில் மருதப்பா பதுமநாதன் —வழக்காளி

இல. M B. 5233 எதிராக

அச்சுவேலி தெற்கு 1. ஆன்வான் சரவணை 2. முருகர் இரத்தினமும் பெண் 3. பரிமளமும் 4. இராமநாதன் கிருஸ்ணன் 5. கனகம்மா 6. சரவணை கதிரமலை 7. சடையர் வீரகோனும் பெண் 8. செல்லமும 9. வயிரவி செல்லத்துரையும் பெண் 10. பூரணமும், 11. சரவணை மகன் குணமணியும்.

— எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 5233-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் மூன்று துண்டுக் காணிகளை 1967-ம் ஆ ஐப்பசி மீ 30-ந் திகதி திங்கட் கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:—முதல் வட்டி ரூபாய் 4100-00-ம் 22-11-62 தொடக்கம் 19-12-63 வரைக்கும் ரூபாய் 3000-க்கு 15 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 301-75 சதமும்

### ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப்பகுதி அச்சுவேலி கோயிற்பற்று தம்பாலை இறை "பேரணித்தறை" பரநில இலா $14\frac{3}{4}$ எல்லை கிழக்கு வல்லிபுரம் பெண் நாகம்மாவுக்கும் மறுபேருக்குமுடைய வாதனம் வடக்கு வளிப்பாதை மேற்கு சின்னவன் சுப்பனுக்கும் பங்காளருக்குமுடைய ஆதனம் தெற்கு இளையவன் தர்மனுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம் இதில் செரியலாய் 1/6 பங்கு பதிவு இலக்கம் K. 118/25

2. ஷ கோயிற்பற்று அச்சுவேலி தெற்கு இறை "கோளையன்" பர நெல் இலா 36-ம் கிணறுகளும் எல்லை கிழக்கு நாகன் மாணிக்கனுக்கும் குருநாதி புதியனுக்கும் மறுபேருக்குமுரியவாதனம் வடக்கு செட்டி சின்னப்புக்கும் பங்காளருக்கு முரியவாதனம். மேற்கு அருமையர் செல்லையாவுக்கும் ஆறுமுகம் வேலுப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரியவாதனம் தெற்கு கட்டையன் வேலுவுக்கும் தம்பியன் கந்தையாவுக்கும் மறுபேருக்குமுரியவாதனம் இதில் சேரியலாய் 3/9 பங்கு பதிவு இலக்கம் K. 163/70

3. ஷ தம்பாலை இறை "வெளியிற் சீமா" பர நில இலா 1-ம் குளி 3-08-ம் வீடும் கட்டிடங்களும் செய்பயிர் வான்பயிர்களும் கொண்ட பெற்ற கலாநிதா C. முத்துக்குமாரசுவாமியால் 31—12—62-ம் ஆண்டு 138-ம் இலக்கப் படத்தின்படி கடைசிப் பிரிவிடுதல் வழக்கு இலக்கம் 5400 ன்படி சொல்லப்பட்ட லொட் 2 என்னும் துண்டுக் காணி. இதற்கு எல்லை கிழக்கு ஒழுங்கையும், மூன்றும், நாலாம் துண்டுக் காணிகளும் வடக்கு முதலாம் துண்டு காணி மேற்கு சிமியானுக்கும் மறுபேருக்குமுரியவாதனம் தெற்கு றேட்டு. இதடங்கலும் அதைச் சேர்ந்தவைகளும். பதிவு இலக்கம். K. 208/224

16, A அம்மன் றேட்
கந்தர்மடம், யாழ்ப்பாணம்

அ. ஜெகநாதன்
கொமிசனரும் விலைமதிப்பாளரும்
எம், 253 29—9—67

## கோட்டு விற்பனவு விளம்பரம்

நவாலி, பலநோக்கக்கூட்டுறவுஐக்கியசங்கம் Ltd, மானிப்பாய் —வழக்காளி

இல. M B. 7076 எதிராக

கதிரன் தேவராசா மானிப்பாய் எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B. 7076-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும்துண்டுக்காணி, 1967-ம்ஞு கார்த்திகை மீ 19-ம்உ ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலததில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:—முதல் வட்டி ரூபாய் 1075-75-ம் 30-11-64 தொடக்கம் 11-1-66 வரைக்கும் ரூபாய் 833-க்கு 4 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 281 சதம் 33.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்கு உடுவில் கோவில்பற்று உடுவிலிறை "ஈச்சந்தாலை" நிலப்பரப்பு 5 குளி 9, 9/10 (5 குளி ஒன்பதும் 9/10) கிணற்றுப் பங்கும் வழமையான வழிவாய்க்கால் பாவிப்புரிமையும் துரவையில்பங்கும்துலாவும் துலா வைத்தாக்கிகிற்கும் கம்பங்களினதும் பாவிப்புரிமையும் மேலும் அதற்குரிய வழி உரிமையும் இவ்வாதனத்துக்கு எல்லை கிழக்கு வேலுப்பிள்ளை கதிரேசுவுக்கும் மறுபேருக்குமுரியவாதனம் வடக்கும் மேற்கும் கதிரன் தருமலிங்கத்திற்குரிய ஆதனம் தெற்கு சின்னத்துரைக்கும் மறுபேருக்குமுரியவாதனம் இவ்வெல்லைக்குள்ளடங்கிய முழு ஆதனமும். பதிவு இலக்கம் H. 291/211

"கமலபதி"
ஆஸ்பத்திரி வீதி,
மண்டைதீவு
22—9—67

மு. நவரத்தினராசா
கொமிசனர் அன் விலைமதிப்பாளர்
எம், 249. 29—9— )

## தரம் உயர்த்துக

அத்தியார் இந்துக் கல்லூரிப் பெற்றோர் - ஆசிரியர் சங்கத்தினதும் பழைய மாணவர் சங்கத்தினதும் இணைச்செயற் குழுக்கூட்டம் சென்ற 20-9-67 ல் நடைபெற்றபொழுது ஷ கல்லூரியில் முதலாம் தரம்தொடக்கம் பன்னிரண்டாம் தரம்வரை வகை செய்து கலை, விஞ்ஞானம் தொழில் சம்பந்தமான கல்வி என்பன போதிக்கக்கூடிய வசதிகள் புரிந்து கல்லூரியின் தரத்தை உயர்த்தும்படி கல்விப்பகுதியைக் கேட்பதெனவும் முடிவு செய்யப்பட்டது.

மேலும் 24-9-67 -ல் சகல இயக்கங்களின்ஒத்தாசையுடனும் ஷ கல்லூரியின் விளையாட்டுத் திடல் சிரமதான மூலம் மட்டப்படுத்தப்பட்டது. —

## ஏழாலை - தென்மேற்கு இந்து சமய விருத்திச் சங்கம்

இச் சங்கத்தின் 9 - ஆவது ஆண்டுவிழா சென்ற 18-9-67 ல் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மாணவர்களின் சமய சம்பந்தமான பேச்சுகள் இடம் பெற்றதோடு "திருவருட் செல்வர்" என்னும்நாடகமும் மாணவர்களால் நடிக்கப்பட்டது.

ஷ சபையால் நடாத்தப்பட்ட பேச்சுப்போட்டி தேவார மனனப் போட்டி, எழுத்துப்போட்டி என்பவைகளில் சித்திபெற்றோர்கட்கு தலைவர் மு. சிற்றம்பலம் அவர்களால் பரிசில்கள் வழங்கப்பட்டன. ——

## பிரிவிடுதல் நோத்தீஸ்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில்

இல 9403

எதிராக

1. அல்வாய் தெற்கு கணபதிப்பிள்ளை முருகேசு
2. பெண் மீனாட்சிப்பிள்ளை
3. முருகேசு தங்கவேலாயுதம் [3-ம் வழக்காளி பராயமற்றவராக இருப்பதால் அவரின் வகைக்காக 1-ம் வழக்காளி மூலமாக.] —வழக்காளி

1. அல்வாய் தெற்கு வல்லிபுரம் பசுபதி
2. கந்தப்பர் கணபதிப்பிள்ளை
3. வல்லிபுரம் கணபதிப்பிள்ளை
4. வல்லிபுரம் கந்தையா
5. வல்லிபுரம் ஆறுமுகம்
6. கதிரிப்பிள்ளை கந்தையா
7. கதிரிப்பிள்ளை சின்னத்தம்பி
8. கணபதியார் முருகர்
9. கணபதிப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை
10. பெண் கண்ணகைப்பிள்ளை
11. கார்த்திகேசு குமாரசாமி
12. அல்வாய் மேற்கு வீரகத்தியார் கணபதிப்பிள்ளை
13. அல்வாய் தெற்கு வீரகத்தியார் சிதம்பரப்பிள்ளை
14. பொன்னையா பெண் வள்ளிப்பிள்ளை
15. கணபதிப்பிள்ளை கந்தையா
16. ஆறுமுகம் சுப்பிரமணியம் —எதிரிட்கு

துன்னாலை வீரசுந்தரமுதலிகுறிச்சி இறை பந்தாவளைத் தோட்டம் நிலப்பரப்பு 31, 3/8 என்னுமாதனம் அல்லது ஆதனங்களை 1951ம் ஆண்டின் 16-ம இலக்கப் பிரிவிடுதற் கட்டளைச் சட்டத்திற்கமைய மேற்படி கோட்டில் மேற்படி இலக்கத்தில் ஓர் பிரிவிடுதல் வழக்குத் தொடர்ந்திருக்கிறதென்று இத்தாலுமக் கறிவிக்கப்பட்டிருக்கின்றது.

மேற்படி வழக்கில் எதிரிகள் மேற்படி கோட்டில் 1967-ம் ஞு கார்த்திகை மீ 18-க் உ 10 மணிக்குச் சமூகமளிக்கும்படி கட்டளை பண்ணப்பட்டிருக்கிறார்கள்,

கோட்டாரின் கட்டளைப்படி
சே. யோ. நவரட்டினம்
சக்கிடுத்தார்.
1967ம் ஞு புரட்டாதி மீ 20 உ

## கோட்டு விற்பனவுவிளம்பரம்

சின்னையா ஐயர் நடராசா ஐயர் அரியாலை யாழ்ப்பாணம்—வழக்காளி

இல. M B. 5959 எதிராக

1. அரியகுட்டி ஜெயரத்தினம் மாட்டினும் பெண் 2. லெட்சுமியும் இருவரும் கண்டிக்குளி யாழ்ப்பாணம் —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B. 5959-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த் கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணி, 1967-ம் ஞு காத்திகைமீ 12-ந் உ ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:—முதல் வட்டி ரூபாய் 4,644-44 ம் 14-8-63 தொடக்கம் 21-5-64 வரைக்கும் ரூபாய் 4000 க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 326-15

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கண்டிக்குளி கோவிற்பற்று சிவியாதெரு இறை "புளியடி வளவு" ம் "மன்னன் வளவும்" "தோட்ட வளவும்" நிலப்பரப்பு 11, 1/8 ஆனால் ஆட்சிப்படியும் உலாந்தாவின் அளவுப்படியும் நிலப்பரப்பு 10 குளி 15 இதில் வடக்குப்பக்கமாக நிலப்பரப்பு ஒன்று குளி பதினைவரை (நிலப்பரப்பு 1 குளி $14\frac{1}{2}$) யும் வீடும் மலகூடமும் கிணறும் செய்பயிர் வான்பயிர்களும் குறித்தநிலப்பரப்பு 1குளி $14\frac{1}{2}$ க்கும் எல்லை கிழக்கு சரவணமுத்து இராசரத்தினத்திற்குரியவாதனம் வடக்கு சரவணமுத்து இராசரத்தினத்திற்கும மறுபேருக்குமுரியவாதனம் மேற்கு ஒழுங்கை தெற்கு கணபதிசின்னத்துரை பெண் மரகதத்திற்குரிய ஆதனம் இதடங்கலும் பதிவு இலக்கம் D, 150/222.

"கமலபதி"
ஆஸ்பத்திரி வீதி,
மண்டைதீவு.

மு, நவரெத்தினராசா
கொமிசனரும் விலைமதிப்பாளரும்
எம். 248 29 —9 67

## கோட்டு விற்பனவு விளம்பரம்

T. யோகராசாவின் மனைவி தனலெட்சுமி இல. 9, நாயன்மார் றோட்டு, நல்லூர், —வழக்காளி

இல M B. 7849 எதிராக

1. சிவக்கொழுந்து சிவாநந்தம் வண்ணார்பண்ணை கிழக்கு
2. தெய்வநாயகம் யோகராசா மீசாலை தற்போது Clerk, Land Development Office, Anuradhapura —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B. 7849-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணியை 1967-ம் ஞு ஐப்பசி மீ 24-ம் உ செவ்வாய்க கிழமை முற்பகல் 10–30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:—முதல் வட்டி ரூபாய் 8509/33 சதம் 3-12-65 தொடக்கம் 19-1-67 வரைக்கும் ரூபாய் 6000-க்கு 8 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 465/30 சதம்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடகிழக்கிறை "நொச்சிககாடு" நிலப்பரப்பு 6-ம் வீடும் கிணறும் பயிர்வகைகளும தெற்கெல்லையில் இருக்கும் கிணறுகளில் பங்கும், எல்லை கிழக்கு ஏகாம்பரம் கைம்பெண் செல்லமுத்துவின் ஆதனமும் ஒழுங்கையும் வடக்கு சிதம்பரப்பிள்ளை சின்னத்துரை கனகசபை பெண் இரத்தினம் ஏகாம்பரம் கைம் பெண் செல்லமுத்துவின் ஆதனங்களும்றோட்டும். மேற்கு சிவக்கொழுந்து சிவாநந்தமும் பங்காளர்களின் ஆதனமும் தெற்கு சிவக்கொழுந்து பெண் வள்ளியம்மையின் உரிமையாளர்களின் ஆதனம் இவ்வாதனம்முழுவதிலுமிருந்து பிரிக்கப்படாத ½ பங்கும் அதற்குள் சேர்ந்தவைகளும் டி. 278/216-ன் கீழ் பதியப்பட்டுள்ளது.

22. ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். 12-9-67

வே. கோபாலபிள்ளை,
கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்
(எம் 7849. 29-9-67.)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

அச்சுவேலி பத்தைமேனி சின்னத்தம்பி சின்னத்துரை —வழக்காளி

இல. M B. 6293 எதிராக

அச்சுவேலி பத்தைமேனி தம்பிமுத்து இராசரத்தினம் —எதிராளி

யாழ்ப்பாணம் அச்சுவேலி வடக்கு 1. கார்த்திகேசு இராசரத்தினம் 2. இராசரத்தினம் மகள் இந்திராதேவி —வெளிப்படுத்தப்பட்டவர்கள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B. 6293-ம் இலக்கவழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1967-ம் ஆ நவம்பர் (கார்த்திகை) மாசம் 15-ந் உ (15-11-67) புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:—முதல் வட்டி ரூபா 4112-ம் இதில் ரூபாய் 2500/-க்கு 31-12-63 தொடக்கம் 1-10-64 வரையும் 100-க்கு 9 வீத வட்டியும் பின் 1-10 64 தொடக்கம் கூட்டிய தொகைக்கு இறுபடும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 286 சதம் 15 இதில் ரூபா 2000/- கழிபடவேண்டும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி அச்சுவேலிக் கோவிற்பற்று தம்பாலை இறை "திருவாட்டி புலம்" நிலப்பரப்பு 27-ம் குளி 12 கிணறும் செய்பயிர் வான்பயிர்களும் எல்லை கிழக்கு நாகலிங்கம் பெண் சரஸ்வதிப்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரியவாதனம். வடக்கு பொன்னம்பலம் நாகலிங்கத்தினுதனமும் ஒழுங்கையும் மேற்கு முருகேசு கனகசபையின் உரிமைக்காறருக்குரிய ஆதனமும் ஒழுங்கை முகப்பும் தெற்கு தில்லையம்பலம் செல்லத்துரைக்கும் பங்காளருக்குரிய ஆதனம் இதில் சொரியலாய் ஒன்பதில் ஐந்துபங்கு. (5/9)

விரேசன் றோட்,
கோண்டாவில், 25-9-67.

S. இரத்தினசபாபதி, J. P.
கொம்மிஷனரும், விலைமதிப்பாளரும்.
(எம். 252 29-9-67 )

## நாடெங்கும் கொண்டாடும்
# நவராத்திரி பூஜை

பண்டிதர். செ. சிவப்பிரகாசம்.

சிவ பெருமான் ஆன்மாக்கள் உய்யும் பொருட்டுத் தமது சத்தியாகிய உமாதேவியாருடன் எழுந் தருளியிருக்கின்றார். சிவ பெருமானின் சத்தியே பல உருவு கொண்டதாகப் பாவிக்கப் பட்டு நவராத்திரி காலங்களில் நாடெங்குங் கொண்டாடப் படுகின்றது. சிவ பெருமான் 'பரம சிவம்' என்று கொள்ளப்படும் போது அவரது சத்தி 'பராசத்தி' என்றுகொள்ளப் படுகின்றது. பரம சிவமும் பராசத்தியும் ஆன்மாக்களின் மேலே முகிழ்த்த பெருங் கருணையினாலே பல பல உருவங்களைக் கொள்கின்றனர்.

நவ சத்தி பேதங்கள் பராசத்தி யிலிருந்து ஒன்றி னின்றொன்றாக உற்பவிக்கும் அங்ஙனம் இப் பிரபஞ்ச மனைத்தும் சிவ முஞ் சத்தியுமாக நின்று இறைவன் அருள் புரிவன். அவ்வருளை அள்ளிச் சொரிபவள் பராசத்தி. அப் பராசத்தியை வழிபடும் வழக்கம் சரித்திர காலத் துக்கும் முற்பட்ட பல்லாண்டுகளாக நமது நாட்டில் வழங்கி வருகின்றது. அப்படி வணங்கும் போது தேவியை மூன்று திருவுருவங்களில் நம மூதாதையர் அமைத்து வழி பட்டனர். அம் மூவரையும் நாம் துர்க்கை, இலக்குமி, சரஸ்வதி என அமைத்து வழி பட்டு வருகின்றோம். துர்க்கா தேவியின் வழிபாடு மகா பாரத காலத்தில் நிகழ்ந்திருக்கிறது. கிருஷ்ணபரமாத்மா அருச்சுனனை நோக்கி நீ துர்க்கையைத் தியானிப்பாயாக என்று உப தேசஞ் செய்திருக்கிறார். பழைய இலக்கியங்கள் பலவற்றிலும் துர்க்கையைப் பற்றிய பல குறிப் புக்கள் வந் துள்ளன மார்க் கண்டேய புராணம், ஸ்கந்த புராணம் தேவிஸூக்தம், கேநஉபநிஷதம் முதலியனவும் தேவியின மகிமையை எடுத்தியம்புகின்றன. பாணமகா கவியின் காதம்பரியிலும் சோமதேவரின் கதாஸரித் சாகரத்திலும் ஆதி சங்கரரின் அமநசதகத்திலும் துர்க்கா தேவி யைப் பற்றி விரிவாகக் கூறப் பட்டுள்ளன.

தேவியை வழிபடுபவர்கள் புரட்டாசி மாசத்துச் சுக்கிலபக்கத்து பிரதமை தொடங்கி நவமி ஈறாக வழிபடுவார்கள். பிரதமைதிதியோடு அத்தநட்சத்திரமும் கூடியிருக்கும். ஆனமையால் வீரம்பொருந்திய தினமாக அத்தினம் மிளிர, அத்தினம் தொடக்கம் நவமிவரை நவசத்திகளையும வழிபடுவர். ஒன்பது நாட்களிலும் முறையே மகேஸ்வரி, கௌமாரி, வாராகி, மஹாலட்சுமி, வைஷ்ணவி, இந்திராணி, மஹாசரஸ்வதி, நாரஸிம்மி, சாமுண்டி முதலிய ஒன்பது தேவியர்களுக்கும் முதன்மையாகப் பூசை நடைபெறும். இவ்வொன்பதின்மரும் பராசத்தியினது ஒன்பது அம்சங்களாமென்பதை நாம் கண்டுகொள்ளலாம். இந்த ஒன்பது தினங்களிலும தேவியை வழிபட்டு அவளுடைய திருவருளைப் பெற்று உய்யலாம். இவற்றுள்ளும் நாரஸிம்மி எனப்படும் பத்திரகாளிக்குரிய எட்டாம் நாள் (அட்டமித்திதி) மிக முக்கியமானது. ஒன்பது நாள்களின் பூசைப்பலன் அந்த ஒருநாட்பூசைப் பலனுக்கு உண்டு. இங்ஙனம் ஒன்பது நாள்களிலும் ஒன்பது தேவியர்கள் வழிபடப் படினும் துர்க்காதேவியை முதல் மூன்றுநாள்களிலும், இலக்குமிதேவியை அடுத்த மூன்று நாட்களிலும், சரஸ்வதிதேவியை அதற்கடுத்த மூன்று நாட்களிலும வழிபடுவார்கள். அங்ஙனம் வழிபடுதலால் மானிடர்களுக்கு ஆவசியகம் தேவையாகிய வீரம், செல்வம் கல்வி ஆகிய முப்பயன்களையும் முறையே துர்க்கா தேவி, இலக்குமி தேவி, சரஸ்வதிதேவி என்போர் அநுக்கிரகிக்கின்றனர். அவ் வநுக்கிரகத்தை நாமெல்லோரும் பெற்று உய்வடைதல்வேண்டும். இதற்காக செபம், யாகம், மந்திர அநுஷ்டானம் முதலிய பத்தி மார்க்கத்தை நாம் கைக்கொண்டு சாத்விகமாக வழிபடலாம்.

முன்னொரு காலத்திலே மது, கைடபர் என்னும் இரண்டு அரக்கர்கள் இருந்தார்கள். இவர்கள் மிக வியக்கத்தக்க வலிமையுள்ளவர்கள். இவர்களோடு விஷ்ணுமூர்த்தி அனேக காலமாக யுத்தஞ்செய்து வெற்றிகொள்ள முடியவில்லை. இதனல் மகிழ்வு மீதூரப்பெற்ற மது கைடபர்கள் விஷ்ணுமூர்த்தியைப் பார்த்து "உனக்கு வேண்டிய வரத்தைக் கேள் தருகிறோம்" என்றார்கள். உடனே விஷ்ணுமூர்த்தி 'மகா வீரர்களாகிய உங்களிருவரையும் கொல்லும் பெருமை எனக்கு வேண்டும்" என்று வரம் வேண்டினார் மும்மூர்த்திகளுள ஒருவராகிய மகாவிஷ்ணு வேதங்களிடம் வரம் வேண்டுகிறார் என்று எண்ணி மிக மகிழ்வுகொண்டு "சரி அப்படியே ஆகட்டும்" என்று வரங் கொடுத்துவிட்டார்கள். சிறிது நேரத்தில் தங்கள் மடமையை உணர்ந்து தங்களிருவரையும் பூமியில்மட்டுமே கொல்லல் வேண்டும் என்று ஒரு நிபந்தனை போட்டுவிட்டார்கள். அதன்பின்பு அவர்கள் பூமிக்குவராமலிருந்து விட்டால தம்மை விஷ்ணுமூர்த்தி கொல்லமாட்டார் என எண்ணிப் பூமிக்கே வராமல் இருந்தார்கள். அப்போது விஷ்ணுமூர்த்தி பராசத்தியின் துணையினாலே மாயை வடிவெடுத்து யோகமாயை உதவிசெய்ய அவ்விருவரையும் தமது தொடையே பூமியாக ஆக்கி அதில் வைத்துச் சங்கரித்தருளினர். இதனல் பராசத்தியின் பெருமை புலப்படுகின்றது.

அதிதிக்கும் காசிபருக்கும் மகனுகப் பிறந்த மகிடாசுரன் என்பவன் ஒருவன் தேவர்கள் எல்லோரையும் வென்றான். தேவர்கள் நடுநடுங்கி விஷ்ணுமூர்த்தியிடமும், சிவபெருமானிடமும் சரண்புகுந்தனர். மகிடாசுரன் பெண்ணாலன்றி வேறொருவராலும் அழியமாட்டாத வரம் பெற்றவன். அதனல் மும்மூர்த்திகளாலுமஒன்றுஞ்செய்ய முடியவில்லை. அவர்களுக்குச் சினம் பொங்கி எழுந்தது. அக்கோபாக்கினி எல்லாம ஒன்றதிரண்டுஒரு பெண்ணுருவம் உண்டாகியது. அதுவே சண்டிதேவியாகும். மும்மூர்த்திகளும் தேவர்களும தங்கள்தங்கள் ஆயுதங்களைச் சண்டிதேவிக்குக் கொடுத்தார்கள். ஆயிரங் கரங்களிலும் ஆயுதங்களைத் தாங்கிச் சண்டிதேவி மகிஷாசுரனை அழிக்கத் தொடங்கினள். தேவியின் கோபக் கனலிலிருந்து ஆயிரமாயிரம் வீரர்கள் தோன்றி அசுரப் படைகளை அழிக்கலாயினர்.

(தொடரும்)

## நவராத்திரி விழா

யாழ் - வண்ணை - சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தில் புரட்டாதி மீ 18 உ (4-10-67) நவராத்திரி விழா ஆரம்பமாகி 12 - 10 - 67 - ல் மானம்பு நடைபெறும்.

ஷை காலங்களில் விஷேச பூசை உபந்நியாசம் இன்னிசைக கச்சேரி என்பன இடம் பெறும்

X X X

பரமேஸ்வரக்க ல்லூரியில்....

யாழ் - பரமேசுவரக் கல்லூரியில் நவராத்திரி விழா ஷை காலங்களில் வழமை போல் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பெறும்

ஷை விழாவில் ஸ்ரீ-ல-ஸ்ரீ ஸ்வாமிநாத தம்பிரான் சுவாமிகளின் உபந்நியாசமும் இடம் பெறும்.

X X X

நல்லை. அரசினர் ஆசிரிய கலா சாலையில் ........

நல்லூர் அரசினர் ஆசிரிய கலாசாலையில் 12 - 10 67 - ல் விஜய தசமி வெகு சிறப்பாகக் கொண்டாடப்படுவதுடன் ஷை தினத்தில் இசையரங்கு கவிதையரங்கு என்பனவும் இடம் பெறுவதோடு சகல கலா வல்லி மாலையும் அன்பர்கட்கு இலவசமாக வழங்கப் பெறும்.

X X X

யாழ் நாயன்மார்கட்டு ஸ்ரீஇராஜ இராசேஸ்வரி பேச்சியம்பாள் கோவிலில் நவராத்திரி விழா வழமைபோலச்சிறப்பாக நிகழும் 4-10-67 தொடக்கம் 12-10-67 வரைநிகழும் இவ்விழாவில் தினமும் கூட்டுப்பிரார்த்தனையும் பிரசங்கமும் நிகழ. நாயன்மார்கட்டு சைவசமய அபிவிருத்திக் கழகத்தினரும் ஷை ஆலயபரிபாலனசபையினரும் வேண்டிய ஒழுங்குகள் செய்துள்ளனர். (ந.—கி.)

## 4-ம் வகுப்பு முதல் ஆங்கிலம்

இலங்கையிலுள்ள சகல பாடசாலைகளிலும பயிலும் சிறுர்கட்கு 4-ம் வகுப்பு முதலாக ஆங்கிலம் கற்பிக்கும் திட்டம் 1968 ஜனவரிமுதல் நடை முறைக்குக் கொண்டு வரப்பெறும்.

சிவ சிவ

திருக்கைலாய பாரம்பரைத் தருமபுரம் ஆதீனம்

25-ஆவது ஸ்ரீலஸ்ரீ கைலை குருமகாசந்நிதானம்

அவர்களின் பொன்னுர் திருவடிக் கமலங்களுக்கு

தில்லையம்பதியில் 17 — 9 — 67 இல் நடைபெற்ற தமிழ்நாடு தெய்வீகப் பேரவையின் 40 - ஆம் நாள் சமயப் பிரசார நினைவு விழாவில்,

"இந்துசாதனம்" அபிமான நிருபர் (சிதம்பரம்)

திரு. மா. பாலசுப்பிரமணியன் அவர்கள் சமர்ப்பித்துள்ள

# விண்ணப்பம்

திருக்கயிலாய பரம்பரை தருமை ஆதினம் 25 ஆவது ஸ்ரீலஸ்ரீ கயிலை குருமகா சந்நிதானமவர்கள் 1959-ம் ஆண்டில் திருக்கயிலை யாத்திரைக்கு பக்த கோடிகளுடன் எழுந்தருளியபோது குடியிருப்புகள் இல்லாத திருக்கயிலை மலையில், அழகுக்கு ஒருவரும் இணையில்லாத அபிராமவல்லி அம்மை, நூதன உடைகள் அணிந்து கொண்டு, பொங்கும் புன்னகையுடனும், கையில்சாட்டையுடனும் ஓர் நூதனமான மங்கையைப்போல் தோன்றி "மிட்டாய்தே" என்றுகேட்க ஸ்ரீலஸ்ரீ கயிலை குருமணிகள உடன் மிட்டாய் வழங்கியதும் நூதனமங்கை ஆனந்தமாய் மிட்டாயை வாயில் இட்டுக் கொண்டிருக்கையில் புகைப்படக் காரர்கள் படம் பிடிக்க முயன்றபோது "நை-நை" என்று சொல்லி நூதனமங்கை மறைந்து விட்ட அற்புதச் செயல் ஸ்ரீலஸ்ரீ கைலை குருமணிகளின் தவவலிமையையே எடுத்துக்காட்டாக விளங்கியுள்ளது என்பதனை அடியேன் தாழ்மையுடன் விண்ணப்பம செய்து கொள்ளுகின்றேன்.

திருக்கயிலை யாத்திரையில சீனர் எல்லைக் காவல் நிலையத்தில் சீனர்கள் பெரும்தலைவர் ஒருவரைச் சந்தேகப்பட்டுப் பலநாள் அங்கு நிறுத்தி வைத்து விட்டனர். துவாரகாபீடாதிபதிகளையும் சீனர்கள் சோதனை செய்ததில் நிறையப் பொருள்களைப் பறி கொடுக்கவும் நேரிட்டது. ஆனல் ஸ்ரீலஸ்ரீ கயிலை குருமணிகள கோஷ்டியுடன் காவல்நிலையம் எழுந்தருளியபோது சீனர்கள் ஸ்ரீலஸ்ரீ கயிலை குருமணிகளைப் பார்த்ததும் சோதனைகள் ஒன்றும நடத்தாமல் "போகலாமே ஏன இங்கே காத்திருக்கவேண்டும்" என்று கூறியதுமேலும் ஸ்ரீலஸ்ரீ கயிலை குருமணிகளின தவவலிமையையே எடுத்துக்காட்டாக விளங்கியுள்ளது என்பதனையும் அடியேன் தாழ்மையுடன் விண்ணப்பம் செய்து கொள்ளுகின்றேன்.

தருமை ஆதின வரலாற்றிலேயே 25 ஆவது குருமணிகளே சமயபுரட்சியின் முதலாவது மகாசந்நிதானமாக விளங்கிக் கொண்டு மக்களிடத்தில் பக்தியும் - சமயப்பற்றும வாழ்க்கையில் பிணைந்து கொண்டுவர திக்கெட்டும் பக்திச்சுவை சொட்டச் சொட்ட அறவுரைகள் வழங்கிக்கொண்டு வருவதோடின்றி அடிக்கடி "வானொலி" மூலமாகவும மக்களுக்கு அறவுரைகள் வழங்கிக்கொண்டு வரும் வேளையில் மக்களிடம் மறைந்திருந்து வேண்டும் வரங்களை அள்ளிக் கொடுத்துக்கொண்டே வரும் கயிலையம்பதியான கட்டளையால் மக்களிடத்தில் மேலும் பக்தியும் சமயப்பற்றும வளர்ச்சி பெற்றுக்கொண்டே வர "தமிழநாடு தெய்விகப் பேரவை" அமைக்கப்பட்டு அப்பேரவைக்குத் தலைவராகக் கயிலை முனிபுங்கவராகவே இருந்துவரல் வேண்டுமென்று பெருங் கருணை கொண்டுள்ள கயிலையம் பெருமான் கட்டளையாலேயே கயிலைதரிசனம் செய்துள்ள ஸ்ரீலஸ்ரீ கயிலை குருமகா சந்நிதான மவர்களையே சென்ற ஆண்டும் பேரவைக்கு ஏகமனதாகத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, இவ்வாண்டும் இரண்டாம் முறையாகப் பேரவைக்கு ஏகமனதாகத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளதை அடியேன் தினசரி நினைந்து நினைந்து பெரு மகிழ்ச்சி அடைந்துகொண்டு வருவதோடு ஸ்ரீலஸ்ரீ கைலை குருமணிகளின் தலைமையில் இயங்கிக்கொண்டு வருகின்ற தமிழ்நாடு தெய்விகப் பேரவையின் எதிர்கால நற்பணிகளால் தமிழகம் வெகு விரைவில் சமயமணம் கமழக்கூடிய சிவராஜதானியாகவே காட்சி அளிக்கும் என்ற திடமான மனதுடன் மக்கள் எதிர்நோக்கியுள்ளனர் என்பதற்கு அறிகுறியாக அண்மையில் மாயூரம் ஸ்ரீ வள்ளலார் கோயிலில் பேரவையின் சிறப்புவிழாவே எடுத்துக் காட்டியுள்ளது என்பதனை அடியேன் தாழ்மையுடன் விண்ணப்பம் செய்து கொள்ளுகின்றேன்.

ஸ்ரீலஸ்ரீ கயிலை குருமணிகள் ஞானபீடம் ஏறிய பொன்விழா தமிழகம் பூராவும் மக்கள் கொண்டாடதில்லை ஸ்ரீ ஆனந்தக்கூத்த பிரானின திருவருள் துணை புரிந்துகொண்டே வரல் வேண்டுமென்று அடியேன் பெரும ஆவல் கொண்டு ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள் சமேத ஸ்ரீ நடராசப் பெருமானின் திருவடிகளில் தினமும் விண்ணப்பங்கள் சமர்ப்பித்துக் கொண்டும் வருகின்றேன என்றும், வணக்கத்துடன் விண்ணப்பம் செய்து கொள்ளுகின்றேன்.

வாழ்க பொற்பாத கமலங்கள்! வளர்க தங்கள்பேரவை!! வெல்க தங்கள் திருச்செயல்கள் !!!

இங்ஙனம்
மீளா அடிமை,
மா. பாலசுப்பிரமணியன்
"தினமணி" "இந்துசாதனம்"
நிருபர்.

# நாநிலம் போற்றும் நவராத்திரி நோன்பு

( 1-ம் பக்கத் தொடர்ச்சி )

பரம்பொருளையே அது குறிக்கும். இனி, பரன் எங்கும் நிறைந்து விளங்குகிறார்; பரை எல்லா இயக்கத்துக்கும் மூலமாகிறார்.

எனவே நாம் ஏதொன்றை நினைப்பதாயினும், சொல்வதாயினும், செய்வதாயினும், சக்தியின்றி அவை நடைபெறுதலில்லை. நுணுகி நோக்குமிடத்துச் சக்தியின்றிச் சிவம் இல்லை என்பதும் புலப்படும். ஆகவே, நவராத்திரி நோன்பு என்பது உலகப்பொது நோக்கிலே, அன்னை பராசக்தியை அன்புகனிந்தருளுந் தாயாகவும்; உற்றவிடத்து உதவும் சகோதரியாகவும்;

தெவிட்டா இன்பருளும் கன்னிக் குழவியாகவும் கண்டு வணங்கி அனுட்டிக்கும் ஒரு சிறந்த விரதம் என்பதும்; சிறப்பாக நோக்குமிடத்து எல்லாம் வல்ல இறைவனிடத்தே எமது வாழ்வின் அடிப்படையான உண்மை நிலையை ஒப்பித்தலே என்பதும் பெறப்படும்.

அறிவு, அன்பு, அருள் என்பன மூன்று சிறந்த பண்புகள். அவை மூன்றும் ஒவ்வொரு மனிதருக்கும் இன்றியமையாது வேண்டப்படுவன. அறிவு என்னும் பண்பு விரிவுபடுத்துவது, பரவச் செய்வது. பரம்பொருளாகிய சிவபிரானது இயக்கமே சிவசக்தி. அவர் பிராமீ அல்லது சரஸ்வதி என்ற சக்தியை அதிட்டித்து நின்று பிரபஞ்சத்தை விரிவுபடுத்தும் முகமாக அறிவுச்செல்வத்தை வழங்குகிறார். இக்கருத்து, 'பதந்கொள் பிரமனுய்ப் படைப்பாய் தாயே" என அன்னை லலிதாம்பிகை அருட்பேராயிரத்தில் வருகிறது. இதனைக் குறிப்பிடவே நவராத்திரியின் இறுதி மூன்று நாளும் சரஸ்வதி பூஜை வழிபாடு என வழங்கப்படுகிறது. கல்வியைப் பேணுபவரும், நுண்கலைகளைப் பயிலும் எவரும், ஏன்? எந்தத் தொழிலாளராயினும் இந்த இறுதி மூன்று நாள் வழிபாட்டைச் செய்யாமவிரார். அறிவுச் செல்வியாகிய கலைமகள் குழந்தைத் தன்மை பூண்டவராய் எவரது உள்ளத்தையும் கவர்ந்து ஞானத்தைப் பரப்புவாராதலின் இந்த நவராத்திரி நோன்பில் பெண் குழந்தைகள் சிறப்பிக்கப்படுகின்றனர்.

அன்பு என்னும் பண்பு பொன், பொருள், யோகம் என்னும் மூன்றையும் தன்னுள்ளடக்கி நிலைபெறச் செய்வது. பராசக்தியானவர் வைஷ்ணவி அல்லது மகாலட்சுமி என்னும் திருப்பெயர் பொருந்திய சக்தியை அதிட்டித்து நின்று பிரபஞ்சத்தை நிலைபெறச் செய்யும் முகமாக ஆன்மாக்கள் அன்பு என்னும் பண்பினால் ஊட்டம்பெற்று ஒருவருக்கு ஒருவர் உறுதுணையாகி வாழச் செய்கிறார். இக்கருத்தை,

"காக்குங் கடவுளாய்க்
காப்பாய் தலைவியே
சக்தி கோவிந்தனுய்ச்
சரிக்குஞ் சாதகீ"

என அன்னை லலிதாம்பிகை அருட்பேராயிரம் கூறுகிறது. இதனைக் குறிப்பிடவே, நவராத்திரியின் நடு மூன்று நாட்களும் பொருட்செல்வியாகிய இலக்குமிக்குரிய சிறந்த வழிபாட்டுத் தினங்களாகப் போற்றப்படுகின்றன. பொன்னும் பொருளும் போகமும் எல்லாம் நிலையற்றவை, அருள் ஒன்றே நிலையுள்ளது என்பர் மகாஞானிகள். ஆம்! உண்மையே!

'அருளிலார்க் கவ்வுலகமில்லைப்
பொருளிலார்க்கு
இவ்வுலகம் இல்லா தியாங்கு'

என்பது தமிழ்மறை. நிலையான அருட்செல்வத்தைத் தேடிப் பெற்றுக்கொள்வதற்கு நிலையற்றதான பொருட்செல்வம் இன்றியமையாது வேண்டப்படுகிறது. சுவரிருந்தாற்றான் சித்திரம் எழுதலாம், எனவேதான், அன்பு என்பதனாலே கட்டுப்பாட்டுக்கு அமைந்து உலகவாழ்வின் உண்மை நோக்கு கடைப்பிடிக்கப்படுகிறது. அதனாலேதான் நவராத்திரி காலத்தில் சுமங்கலிகளான இளம்பெண்களை மகாலட்சுமியாகப் போற்றி ஆடை ஆபரணம், அன்னம் பானீயம், மஞ்சள் குங்குமம், பல தாம்பூலம் எனப் பவற்றுள் இயல்வன கொண்டு கொடுத்து வழிபாடு செய்யப்பட வேண்டியவராவர்.

அருள் என்னும் பண்பு ஆன்மாக்கள் பிரபஞ்ச வாழ்வினிடத்தே கொண்ட பொய் மயக்கத்தையெல்லாம் கெடுத்து, உறுதியான இன்பவாழ்வைத் தருவது. பராசக்தியானவர் துர்க்கை அல்லது இரௌத்திரி என்னும் சங்கார சக்தியை அதிட்டித்து நின்று ஆன்மாக்களின் மும்மல பந்தங்களை அழித்தருளிய தூய நெறியில் ஒழுகி உய்த்துப் பரிபக்குவம் வரும்போது பரமுத்தியின்கண் திளைக்கச் செய்தருளுகின்றார். இக்கருத்தை,

"சர்வமும் லயப்படு
சங்கார ரூபிணீ
உறுதுன் பொழிக்கும்
ஓங்குருத் திரையே
திரோத காரிணீ
தேவியீ சுவரியே
சிரோமணி நோசதா
சிவையாம் வடிவே
வரம்பெறு முத்தியை
வழங்கி அருளுவாய்"

என, அன்னை லலிதாம்பிகை அருட்பேராயிரம் கூறுகிறது. இதுவே, நவராத்திரிகாலத்து முதல் மூன்று நாளிலும் துர்க்கை வழிபாடாகக் கருதிச் செய்யும் நோன்பாகும். முதிர்ந்த சுமங்கலிப் பெண்களின் மனம் குளிரும்படி அவர்களைத் துர்க்காதேவியாகப் போற்றி உபசரித்துச் செய்யும் வழிபாட்டினால் இரவுத்திரியின் அருட்செல்வத்தை இலகுவாகப் பெறலாம். இந்த அருட்செல்வமே நல்லொழுக்கம், நெஞ்சுத்துணிவு, போர்வெற்றி, கோழைபடாமை, பிறர்க்கு உதவிபுரிதல், வீரமதீரம், தைரியம், இரக்கமுடைமை என்னும் அருங்குணங்களைத் தரும்.

நவராத்திரி நோன்பின் இச் சிறப்புவழிபாடு ஆலயங்கள் எவற்றிலும் செய்யப்பட வேண்டியது. ஏனெனில், சக்தியம்சம இல்லாத ஆலயங்களே இல்லை. திருக்கோவில்களில் மாத்திரமா? வித்தியாலயங்கள், மடாலயங்கள், பாடசாலைகள், காரியாலயங்கள், தொழிற்சாலைகள், நுண்கலைக்கூடங்கள், யந்திரசாலைகள், வாசகசாலைகள், நூல்நிலையங்கள், சனசமூக நிலையங்கள், அதிகம் விவரிப்பதேன், மக்கள் ஒருங்குகூடும் இடங்களில் எல்லாம் நவராத்திரி நோன்பு அனுட்டிக்கப்பட வேண்டியதேயாம்.

குறிப்பிட்ட மூன்று சக்திகளாகிய துர்க்காலட்சுமிசரஸ்வதிகள் முறையே மலைமகள், அலைமகள், கலைமகள், எனப் போற்றி ஒன்றுபடுத்திய திருப்பெயரில் சண்டிகாபரமேசுவரி எனத் துதிக்கப்படுகிறார். அன்னை லலிதாம்பிகையானவர் சண்டிகாபரமேசுவரி எனச் சிறப்பித்துப் போற்றி வணங்கப்பெறும். நவராத்திரி காலத்தில் அம்பிகைக்கு உரிய சிறந்த நிவேதனப் பொருள்களாகப் பின்வருவன அமைதல் தக்கது. அவையாவன :—பசுப்பாலுந் தேனும் கலந்ததாகிய மதுபர்க்கம், நெய்பெய்து சமைத்த சுத்தான்னம, சர்க்கரான்னம தயிர்ச்சாதம, பருப்புப்பொங்கல் மஞ்சற்சாதம பலவகைச் சித்திரான்னங்கள் என்பன இதனை அன்னை லலிதாம்பிகை அருட்பேராயிரம் என்னும் நூல் குறிப்பிடுவதாவது:—

"மதுவாந் தேனில் மகிழுவாய்
போற்றி"
"நெய்யினோதனம் நிறை விருப்
புடையாய்"
"வெல்லமா ரன்னம் விரும்பும்
அன்னையே"
"ததியோதனத்துத் தனி விருப்
புடையாய்",
"பொங்கற் பருப்பனம் பொலிய
விரும்புவாய்',
"ஆக்கிய மஞ்சல் அன்னப்
பிரியாய்'
"பல்வகை அன்னம் பயில் விருப்
புடையாய்'

என்பன.

நவராத்திரி நோன்புக் காலத்தில் அதனை அநுட்டிப்பவா கருத்தோடு செய்யவேண்டியன வருமாறு:—

1. எங்கும் எப்போதும் தூய்மை பேணப்படல வேண்டும.
2. மாசுக்கள்— அழுக்குகள் நீக்கப்பட வேண்டும.
3. இருள் நீங்க ஒழிமயமாக்கப் பட வேண்டும்.
4. புனிதமான ஆசாரமும் உள்ளன்பும் பேணப்பட வேண்டும்.
5. அழகு ஒளிர எங்கும் அலங்கரிக்கப்பட வேண்டும்.
6. ஆதரவு பெருக ஏழைகளின் உளளங் குளிரும்படி உதவுதல்வேண்டும
7. நுண்கலைத் திறமைகள் பரப்பப்படவேண்டும்.
8. அகமும் புறமும் தூய்மை பெற ஒழுக்கசீலம் கடைப்பிடிக்கப்படல் வேண்டும.
9 அன்னை அம்பிகையின் அருள் பெருக்கும துதிப் பாடல்கள் இசையுடன் ஓதப்படல் வேண்டும்.
10. தெய்விகத் திருநெறிக்கு மக்களை வழிபடுத்தும்பச்சுகள், புராண படனங்கள், நடனங்கள், நாடகங்கள், ஆகிய இவையாவும் இடம்பெற வேண்டும்.

இவற்றைக் கடைப்பிடித்து வருவோமாயின் நவராத்திரி நோன்பினால் பயனடைவது உறுதியேயாம்.

மனிதருந் தேவரும் மாயா
முனிவரும் வந்துசென்னி
குனிதருஞ் சேவடிக் கோமளமே
கொன்றைவார் சடைமேற்
பனிதருந் திங்களும் பாம்பும்
பகீரதியும் படைத்த
புனிதரும் நீயுமென் புந்தியெந்
நாளும் பொருந்துகவே

—அபிராமி அந்தாதி

# மஹாளய அமாவாசை

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு கணத்தளவில் வந்து தங்கி நின்று தங்கள் சந்ததியாரால் செய்யப்படும் தர்ப்பணம் முதலிய வற்றை ஏற்று உடனே தங்களிருப்பிடமாகிய யமலோகஞ் செல்லும் பிதிர்கள் இம் மஹாளய பட்ச காலத்தில் முன்சொல்லியபடி ஒரு மாதகாலத்திற்கு விருந்தினராகத் தங்கி நிற்பார்கள் ஆதலின் இக்காலத்தில் விசேஷ கிரியைகளைச் செய்து பால் சர்க்கரை, தேன், நெய், அன்னம், தயிர், கறி வர்க்கங்கள் எள்ளு முதலியவற்றால் பிதிர்களைச் சந்தோஷமடையச் செய்தல் வேண்டும்.

ஒருவன் யாசகனாயினும் பொருளில்லாத மிக்க வறியவனாயினும இச் சிராத்தத்தைச் செய்தல் வேண்டும் அவன் எள்ளுந் தண்ணீரும் மிக்க அன்புடன் இறைத்தால அதுவே பிதிர்களைத் திருப்திப் படுத்தும். அன்பும சிரத்தையும் கொண்டு இக் கிரியை செய்யின் அதுவே புனித இடமாகிய கயா (Gaya) க்ஷேத்திரத்தில செய்த பலனை அடைவிக்கும்.

இந்த மஹாளயசிராத்தம் செய்பவருக்கும் அவருடைய பிதிர்களுக்கும நன்மை பயக்கும். இக கிரியையில் பிதிர்கள் பிரேத உலகம் விட்டு மேனிலையடைவார்கள்.

செய்தவரும் இம்மையில் தனதானிய சம்பத்து புத்திரலாபம முதலிய ஐசுவரியங்களைப் பெற்று வாழ்தலுமின்றி மறுமையில நறகதியுமடைவார்கள்.

இச் சிராத்தத்தை நாம் செய்யும் பொழுது:—

1-ம் நாள் செய்யின் இலாபத்தையும், 2-ம் நாளல் புத்திரப்பேற்றையும், 3ம் நாளில் தன் மனவிருப்பங்களையும், 4ம் நாளில் பகை நாசத்தையும், 5ம் நாளில் செல்வத்தையும், 6ம் நாளில் மதிப்பையும் கீர்த்தியையும், 7ம் நாளில் அதிகாரத்தையும் செல்வாக்கையும் 8ம் நாளில் மேலான விவேகத்தையும் 9ம் நாளில் நன்மனைவியையும் 10ம் நாளில் தன் எண்ணங்கள் நிறைவேறுதலையும் 11ம் நாளில் வேதம் முதலிய சாத்திரப் பயிற்சியையும் 12-ம் 13-ம் நாட்களில் பிள்ளைப் பேறு கல்வி, செல்வம் பசுக்கள் சரீரசுகம், தீர்க்காயுள், முதலியவற்றையும் 14-ம் நாளில் ஆயுதங்கள், நீரிலமிழ்ந்து இறத்தல, நஞ்சுண்டு இறத்தல், முதலியவற்றால் வருந்தும் பிதிர்கள் அவ் வேதனை ஒழிந்து சந்தோஷப்படுவார்கள் 15-ம் நாளில் அமாவாசையில் இவைகள் எல்லாவற்றிலுஞ் சிறந்த மோட்சப் பதவியை அடைவார்கள்.

ஆகவே இக்கிரியையை அன்புடன் செய்யின் மேற்கூறியபடி இருதிறத்தாரும் நன்மையேயடைவார்கள். செய்யாவிடில் இருதிறத்தாருக்கும் துன்பமே பிதிர்களுக்குத் தாங்கள் மேற்கதியடையவேண்டுமென்கிற நம்பிக்கையற்றுவிடும். அமாவாசையின் பின்பும் 14 நாட்களுக்கு அப்பிதிர்கள் தங்கள் சந்ததியான் வீட்டில் தங்கி நிற்பவராதலின் அந் நாட்களிலாயினும் அவர்களைத் திருப்தி செய்தல் அவனது கடமையாகும். அங்ஙனமசெய்யாவிடின் அப் பிதிர்களது சாபத்தால் பல கிரப்பந்தங்களையடைவான். ஆதலின் இதனை உணர்ந்து கிருகஸ்தாகளாகிய நம்மனோரனைவரும் இக் கிரியையைச் செய்து எங்கள் முன்னோர்களை நற்கதியடையச்செய்வோமாக.

## காந்திஜீ நூற்றாண்டு விழா

மகாத்மா காந்தி ஜீயின் நூற்றாண்டு விழா வினை இலங்கையில் கொண்டாடுவதற்கு இந்திய இலங்கை சங்கம் பூர்வாங்க ஏற்பாடுகளை மேற் கொண்டு வருகிறது.

"நீரிற் குமிழிபோல் நிலையற்ற வாழ்வைவிட்டு உன் பேறில் கருணை வெள்ளப் பெருக்கெடுப்ப தெக்காலம்?"

மலரயனுந் திருமாலுங் காணாமை மதிமயங்கப்
புலிமுனியும் பதஞ்சலியுங் கண்டுதொழப் புரிசடையார்
குலவுநடந் தருகதிலலைக் குடதிசைக கோபுரவாயில்
நிலவிய கற்பககன்றி னிறைமலர்த்தா ளிணைபோற்றி.

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் பிறவுண்வீதி 2-ம் ஒழுங்கை 2-ம் இலக்கத்தில்வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 29—9—1967 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.